உ
விநாயகர் துணை

காரைநகர், வாரிவளவு

# கற்பக விநாயகர் ஆலய
# மகா கும்பாபிஷேக மலர்



31-1-1982

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இந்து நாகரிகத்துறைத் தலைவர்

பேராசிரியர்

## கா. கைலாசநாத குருக்கள் அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

ஸ்ரீ நகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் நிகழவிருக்கும் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகத்தின்போது கும்பாபிஷேகத்தை ஒட்டியும், புதிதாகப் பெரும் பொருளை யர்ப்பணித்து நிர்மாணம் செய்யப்பட்ட நூதன இராஜ கோபுர கும்பாபிஷேகத்தை ஒட்டியும், மலர் ஒன்றை வெளியிட நிச்சயித்திருப்பதை அறிந்து மட்டிலா மகிழ்ச்சி யடைகிறேன்.

மலர் சமயம், தத்துவம், இறைவன் பெருமை, இறை வழிபாடு ஆகிய பொருள்களமையப்பெற்று, அழகிய வண்ண மலராக அலர்ந்து தெய்விக நறுமணம் பரப்பும் வகையில் அமைதல் வேண்டும் என விநாயகப் பெருமான் திருவருளை முன்னிட்டு ஆசி கூறுகிறேன்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
15-1-1982

அரியாலை
பிரதிஷ்டா பிரதம சிவாசாரியார்
## சிவஸ்ரீ கு. பாலசுப்பிரமணியக் குருக்கள்
அவர்களின்
# வாழ்த்துரை

சைவமும் தமிழும், அன்பும் பண்பும் தலைசிறந்து விளங்கும் காரைநகர் மக்கள் பேரார்வத்துடன் பக்தி முதிர்ச்சியினால் கட்டப்பட்ட பஞ்சதள இராஜகோபுரம், வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் மூவிரு மாதங்களில் இனிதே நிறைவேறி கற்பக விநாயகருக்கும் வைரவப் பெருமானுக்கும், இராஜ கோபுரத்திற்கும் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது. காரைநகர் மக்கள் இலங்கையில் எப்பகுதியிலும் சென்ற சென்ற இடமெல்லாம் சிறப்பொடு விளங்குவதற்குக் காரணம் கற்பக விநாயகரின் அற்புத அருள் என்பதை அறிந்துள்ளனர். வழிபாட்டில் மேம்பாடு கொண்டுள்ளனர். இன்னும் அவர்கள் சிறந்து விளங்க

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதை உணர்ந்து பஞ்சதள இராஜகோபுரம் அமைத்தது வாரிவளவு மக்களின் எழிச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

"கற்றதனலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்னும் கூற்றுகளுக் கேற்ப மேன் மேலும் பக்தர்கள் கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் நித்திய நைமித்திய பூசைகளில் விசேடமாக துவஜாரோகண காலங்களில் இயன்ற அளவு விரதம் அனுஷ்டித்து உரிய முறையில் வழிபாடு செய்து கற்பக விநாயகரின் அற்புத அருளைப் பெற்று நீடூழி வாழ்ந்து பேரின்பப் பெரு வாழ்வைப் பெற வேண்டுமென்று கற்பக விநாயகரின் அற்புத அடிகளை மறைமொழியாம் நிறைமொழி கொண்டு முறையொடு வணங்கி இறைஞ்சி ஏத்தி வாழ்த்துகின்றேன்.

அன்பளிப்பு

சித்தி விநாயகர்
ஸ்ரோர்ஸ்

கா. சிவகுருநாதன்
110, பிரதான வீதி,
தங்கொட்டுவ.

அன்பளிப்பு

சுந்தரம் ஸ்ரோர்ஸ்
16, ஸ்ரேசன் ரோட்,
கொச்சிக்கடை.

அன்பளிப்பு

ஸ்ரீ ஜெயாம்பிகை இன்டஸ்ரீஸ்
நாத்தாண்டியா.

தொலைபேசி : 231 — மாராவில.

அன்பளிப்பு



ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்

71, பிரதான வீதி,
கொச்சிக்கடை.

தொலைபேசி : 216

அன்பளிப்பு

நாதன் ஸ்டோர்ஸ்

87/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 7581

அன்பளிப்பு

லிங்கம்
ஸ்ரோர்ஸ்

168, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

தொலைபேசி : 7576

அன்பளிப்பு

நிர்மலா ரேடர்ஸ்

80, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11

தொலைபேசி : 32667

அன்பளிப்பு

# மகராஜா
# இன்வெஸ்ட்மென்ட் லிமிட.

122, கே. கே. எஸ். வீதி - யாழ்ப்பாணம்

தொலைபேசி : 8267

அன்பளிப்பு :

## நியூ சிட்டி
## ரேடர்ஸ்

இல. 4, ஆட்டுப்பட்டித் தெரு
கொழும்பு-13

தொலைபேசி : 36304

அன்பளிப்பு

## சாரதாஸ்

நெல்லியடி

அன்பளிப்பு

# கே. சிவகுருநாதன் அண் சன்ஸ்

78, பிரதான வீதி

எட்டியாந்தோட்டை

அன்பளிப்பு

# கணேசன் ஸ்டோர்ஸ்

ஆலடித்தனே சந்தி - அழுதுமுல்ல

சிவமயம்

யாழ். மருத்துவ பீடத் தலைவர்

## பேராசிரியர் திரு. இ. கனகசுந்தரம் அவர்களின்

# ஆசியுரை

வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய இராஜகோபுரம் காரைநகரில் முதன் முதலாக அமைக்கப்பட்டுள்ள நற்செய்தி அவ்வூர் மக்களாகிய எங்களுக்குப் பூரண மகிழ்ச்சியையும் அதிசயத்தையும் அளிக்கின்றது. இக் கோபுரம் 1981-ம் ஆண்டு தமிழ் வருடப் பிறப்பன்று அமைக்கப்பட வேண்டும் என்ற முடிவிற்கு வரப்பட்டது. அப்பொழுது கற்பக விநாயகருக்கு ஓர் கற்பனைக் கோபுரம் தான் அமைக்கப் போகின்றார்களோ என்ற ஓர் ஐயம் பலர் உள்ளத்திலும் எழுந்தது. ஆனால் அடுத்த ஒன்பது மாதங்களுள் கோபுரக் கட்டிட வேலைகள் எல்லாம் பூர்த்திகரமாய் நிறைவேறியது விந்தையிலும் விந்தை என்றே கருத வேண்டும். இதுவும் கற்பகப் பெருமானின் அற்புதச் செயலோ அல்லது அவன் திருவிளையாடலோ என்று எண்ணும் போதெல்லாம், மெய்தானரும்பி விதிர்விதித்து கண்ணீர் மல்குவதும் ஓர் ஆச்சரியமன்றோ.

நீறிருக்கும் நெற்றியும் ஆறிருக்கும் ஊரும் எவ்வளவு அழகைப் பொழிகின்றனவோ, அங்ஙனமே கோபுரமிருக்கும் ஆலயமும் நம் மனதுக்கோர் மகிழ்ச்சியைத் தருவதுடன் பரபர வெளியைப் பணிந்திடக் காட்டியும், அம்பர வெளியினருளைக் காட்டியும் எங்கள் எல்லோர் மனத்தையும் பரவசமாக்குகின்றது. இதனால் நாமெனும் ஆணவ மலம் நாசமாகவும், பாச பந்தங்கள் நம்மை விட்டுப் பறந்தோடவும், எல்லாம் உன் செயலே யென்ற மனப்பான்மை சிந்தையிலெழவும், நாம் கருதும் முத்திப்பேரின்பம் எழிதில் சித்தியாகும் என்பதற்கோர் ஐயமுண்டோ? இதற்கேற்ப வள்ளுவரும் "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்"

கற்பக விநாயகரின் அற்புதக் கோபுரத்தை அமைத்த சிற்பிகளுக்கும், அவர்களுடன் சேர்ந்து மகத்தான சிவத்தொண்டு செய்த பலருக்கும் விநாயகப் பெருமானின் அருட்கிருபை கிட்டுமாறு நாம் எல்லோரும் எம் பெருமானிடம் வேண்டுகோள் விடுப்போமாக.

இந்தக் கோபுர அமைப்புக்குச் சக்தி போல் இருந்த செந்தமிழ்ச் செல்வி அருந்தவப் புதல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கும் மற்றும் பொருளுதவி, சரீர உதவி புரிந்த பல தொண்டர்களுக்கும் விநாயகப் பெருமான் கருணை பாலிப்பார் என்பதற்கு ஓர் ஐயமுமில்லை. ஈறாக எனது நண்பராகிய அமரர் கணேசபிள்ளை அவர்களின் பாரியாருக்கும் அவ்வம்மை புதல்வர்கள் சகோதரர்கள் எல்லோருக்கும் விநாயகப் பெருமானின் பேரருள் கிட்டுமாறு மனமார வேண்டிக் கொள்ளுகின்றேன்.

காரைநகர், வாரிவளவு கற்பக விநாயகர்
இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற
விநாயகப் பெருமான் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்.

# கணபாலா ஸ்டோர்ஸ்

24, மேல்மாடி

நவீன சந்தை, — யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7806

உ
கணபதி துணை

காரைநகர் — வாரிவளவு

# பிள்ளையார் கோவில்

# இராஜகோபுர மகா கும்பாபிஷேகம்

—சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

" திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தங்கை "

மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியே இறைவன். அங்கிங்கெனாதபடி நிறைந்திருப்பவனை ஆலயங்கள் கட்டி விக்கிரகங்களில் எழுந்தருளச் செய்து வழிபடுவதே ஆலய வழிபாடு. ஆதி மனிதன் தனக்கு நன்மை செய்பவற்றை வணங்கினான். சூரிய வணக்கம், அக்கினி வணக்கம் என்பன இத்தகைய முறையில் எழுந்தவையாகும். ஆனால், காலஞ் செல்லச் செல்ல மனித மனம் விரிந்து " ஒரு நாமம்; ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரந் திருநாமம் பாடித்தொழும் மார்க்கம் எழுந்தது; இதன் பயனாகவே ஆலயங்கள் எழுந்தன. எங்கும் ஒலி அலைகள் பரவிக்கிடந்தாலும் அவற்றைச் சேகரித்து வெளியிட வானொலிப் பெட்டி எவ்வாறு தேவைப்படுகிறதோ, அதேபோல் அருள் வெளிப்பாட்டுக்கு ஆலயம் இன்றியமையாததாகின்றது. ' ஆலயந்தானும் அரனெனத் தொழுமே ' என்பது சிவஞானபோதம். இவ்வடிகளில் காணும் கருத்து எவ்வளவோ பெருமையும், தூய்மையுமுடையது. ஆலயம் என்பது தொழுபவர் நெஞ்சில் மட்டுமல்ல; உண்மையாகவே சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். ஒரு ஊருக்கு உண்மை அழகையும், ஒளியையும் கொடுப்பன ஆலயங்களே. திருக்கோவில் இல்லாத ஊரை " அடவி காடே " என்று அப்பர் சுவாமிகள் வர்ணிக்கிறார். ஆலயங்களைக் கட்டிக் கும்பாபிஷேக விழாக்களை நம் முன்னோர் எடுத்துத் தெய்வீகப் பணி செய்த நோக்கம் இதுவேயாகும். ஆனால் கோயில்களைக் கட்டிவிட்டால் மட்டும் போதாது. தொடர்ந்து கோவிற் பணி சிறப்பாகவும், நித்திய நைமித்திகங்கள் ஒழுங்காக நடைபெறவும் வழிகாண வேண்டிய கடமை சைவ நன் மக்களுக்கு உண்டு.

இத்தகைய சைவ நன்மக்கள் பலர் வாழுமிடம் காரைநகர். இவ்வூரில் அற்புதமாக விளங்கும் வாரிவளவு பிள்ளையார் ஆலயமும் முன்னணியில் விளங்குவதாகும். அங்குள்ள அடியவர்கள் அனைவரும் வாரிவளவு விநாயகனைத் தமது உள்ளக்கோயில் ஏற்றி வழிபடுகிறார்கள். கபில தேவ நாயனார் பாடலில்;

"வாழைக்கனி, பலவின்கனி, மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச்சுருள் குழைஅப்பம் எள்ளுண்டை எல்லாம்துறுத்தும்
பேழைப்பெரு வயிற்றேடும் புகுந்தெம் உளம்பிரியான்
வேழத்திருமுகத்து செக்கர் விநாயகனே."

எனக் குறிப்பிடுகிறார். இதே கருத்தைத் தமதுள்ளத்தில் வைத்துப் போற்றுபவர்கள் இவ்வூர் மக்கள். இவ்வாலயம் இன்று அழகிய சிற்ப வேலைப்பாடுகளோடு அமைந்த இராஜகோபுரத்துடனும், எழில் மிகுந்த திருக்கோயிலுடனும் காட்சி தருகின்றது. திருப்பணித் தொண்டரும், திருக்கோயிற் கண்காணிப்பாளரும், விநாயக பக்தருமாக விளங்குபவர் அன்பர் சிவஞானம் அவர்கள். அவர்களின் அயரா உழைப்பைக் காரை நகர் மக்கள் நன்கு அறிவர். அறங்காவலர் அமரர் கணேசபிள்ளையும், திருமதி கணேசபிள்ளையும் சிவபுண்ணியத்தில் தோய்ந்த உள்ளத்தினர். செந்தண்மையாளர். அவர்களின் பெருந்தன்மையைப் போற்றுமல் இருக்கமுடியாது. நன்கு அறிந்து தெளிந்த உள்ளத்தோடு திருப்பணிகளை நடாத்த ஒருவரை நியமித்த சிறப்பையே உன்னிப் பார்க்க வேண்டும். தொண்ணூறு வருடங்களுக்கு முன் மண்கோயிலாக விளங்கிய இவ்வால யம் இன்று வானளாவுங் கோபுரத்தோடு காட்சி தருகின்றதென்றால் அறங்காவலர் 'சுப்பு' உடையார் பரம்பரையினரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இன்றைய அறங்காவலர் திருமதி பரமேஸ்வரி கணேச பிள்ளை அவர்கள் பெண்மையின் பிறப்பிடம். சாந்தமும், பொறுமையும் கொண்ட இவ்வம்மையார் வாரிவளவு விநாயகனின் அடியாள் என்ற நிலையிலேயே காட்சி தருவார். ஆலய நித்திய நைமித்திக ஒழுங்கும் மிகவும் பாராட்டுக்குரியது. பல ஆண்டுகளுக்கு முன்பு தேர்த் திருப்பணி சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. இத்தேர் தனித் தேக்கு மரத்திலேயே செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்துச் சிற்பிகள்

புதிதாக அமைந்த இராஜகோபுர நிர்மாணத்துக்கு தமிழ்நாடு, சிதம்பரத்திலிருந்து சிற்பி திரு. K. இராமமூர்த்தி அவர்களும், அவர்கள் குழுவினரும் அழைக்கப்பட்டனர். இவர்களே தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய இராஜகோபுரத்தைக் கட்டி முடித்தவர்களாவர். திரு. இராம மூர்த்தி, திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. பிரம்மராயர் திரு. பழனிவேல் ஆகிய நால்வரும் சிதம்பரத்தைச் சேர்ந்த சிற்பிகள். இவர்களின் சிற்ப வேலைத் திறனை இந்நாட்டிலும், தமிழ் நாட்டிலும் பாராட்டாதவர்கள் இல்லையென்றே கூறலாம்.

தற்போது இராஜகோபுரத்துடன் முன் மண்டபமும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. "வீட்டைக் கட்டிப்பார்" என்பது பழமொழி. வீட்டைக் கட்டும்போது ஏற்படும் புதுப்புது அனுபவங்களிலும் பன்மடங்கான அனுபவம் கோயில் கட்டும்போது ஏற்படுகிறது. ஒரு ஆல யத் திருப்பணியில் "இராஜகோபுரம்" முக்கியமானது. கோயில் வாயில் எனப்படும் பெருமை இதற்குண்டு. "வாய் கோபுர வாசல்" என்றார் திருமூலர். அழகிய சிற்பங்கள் புராண வரலாறுகளைக் காட்ட, கோபுர

அமைப்பு தூலலிங்க தரிசனத்தை நல்கி நிற்க, ஐந்து வாயில்கள் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பஞ்சபூத தத்துவத்தை உணர்த்த கலைமேவும் தலைவாசலாக இராஜகோபுரம் விளங்குகிறது. இராஜகோபுரம் கட்டுவது என்பது சாதாரணமான செயலன்று. தெய்வ பலத்தோடு விடாப்பிடியாக ஆன்ம பலமும், இணைந்தால் ஒழிய இப்பணியை நிறை வேற்ற முடியாது ஆனால், கருணைக்கடலாம் கணநாதன் இப்பணியை நிறைவேற்றித் தந்துள்ளான் என்பது அற்புதத்தில் அற்புதமே. கல்லுக் குள் உறுதியையும், நீருக்குள் தண்ணளியையும், தீயுக்குள் வெப்பத்தை யும், பஞ்சுக்குள் மென்மையினையையும் படைத்தவன் பரம் பொருளே. எங்கும் எவற்றிலும் நீக்கமற நிறைந்திருந்தாலும், அவனுடைய அருட் சக்தி வெளிப்படுமிடங்கள் இப்பூவுலகில் திருக்கோயில்களேயாகும்.

திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறை வானுங்கே
உருக்கோலி மந்திரத்தால் எனநினையு மவற்கும்
உளனெங்கும் இலனிங்கும் உளன் என்பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தில் எரிபோல்
வந்துதித்து மிருகரபிக் கெங்கும்
உருக்காண ஒண்ணாத பால்முலைப் பால்விம்மி
ஒழுகுவது போலும் வெளிப்பட்டருளுவான் அன்பர்க்கே.

என்பது சிவஞான சித்தியாரில் ஒரு பாடல். வளர்ந்து வரும் விஞ்ஞா னம், இயந்திரம் போன்ற வாழ்வு முதலியன மனிதனை அமைதியான ஆன்மீகச் சூழலில் இருந்து எங்கோ இழுத்துச் செல்கின்றன. பாலை வனத்தின் நடுவே அமைந்த சோலைகள் போல கோயில்கள் ஆன்மகோடி களுக்கு அருள் நிழல் காட்டும் கற்பகத் தருக்களாகும். இத்திருப்பணி களில் ஈடுபடுவோர் அதி மனிதர்கள் என்று போற்றப்படுதற்குரியர். ஏனெனில் மனிதனை விலங்கு நிலையிலிருந்து விடுவிக்க எடுக்கப்படும் பணி இதுவாகும்.

"கண்டுநின்ற மாயையும், கலந்து நின்ற பூதமும்
உண்டுறங்குமாறு நீருணர்ந்திருக்க வல்லிரேல்
பண்டையாறு மொன்றுமாயப் பயந்தவேத சித்தராய்
அண்ட முத்தியாகிநின்ற வாதிமூல மாவீரே."

நாம் மாயையின் பிடியில் எவ்வளவு தூரம் சிக்குண்டு கிடக்கிறோம் என்பதை இப்பாடல் காட்டுகிறது. இப்படிச் சிக்கித் தவிப்பவர்களுக்குக் கரையேறும் தெப்பங்களாகத் திருக்கோயில்கள் காட்சி அளிக்கின்றன.

பெருமைக்கும், நுண்மைக்கும், பேரருட்கும், பேற்றின் அருமைக் கும் ஒப்பில்லாத இறைவனுக்கு உயர்ந்த இராஜகோபுரம் கட்டுவதன் நோக்கம் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். உயர்ந்து நிற்கும் இராஜகோபுரங்களனைத்தும் மனிதனுடைய உள்ளம் உயரவேண்டும் என்பதையே காட்டுவது. இதற்கு வழிகாட்டுவன திருக்கோயில்களே.

காரைநகரில் வாரிவளவு விநாயகனுக்கு முதன் முதலாக இராஜ கோபுரக் கும்பாபிஷேகம் நடைபெறுவதும் ஒரு பொருத்தமாகும். சிவன் கோவில், அம்மன் கோவில், முருகன் கோவில்களால் சிறப்புப் பெற்ற இவ்வூரில் முதல் நிறைவேற வேண்டியது விநாயகப் பெருமானுடைய இராஜகோபுரம் என்பது யாவரும் அறிந்த உண்மை. எனவே தொடர்ந்து ஏனைய திருக்கோயில் திருப்பணிகளும் நிறைவேறும் என்பது திண்ணம்.

இன்று 31–1–1982 ஞாயிற்றுக்கிழமை இவ்வாலயத்தின் சரித்திரத்தில் ஒரு பொன்னுன நன்னுள். மூல மூர்த்திக்கும், இராஜகோபுரத்துக்கும் ஒன்ருக மகா கும்பாபிஷேகம் நடைபெறக்கிடைத்த நன்னுள். சைவ மக்கள் அனைவரும் இவ்விழாவிற் கலந்து, கண்ணிஞல் அவர் நல்விழாப் பொலிவு கண்டு, இன்ப சுகம் பெறவேண்டும் என்று வாழ்த்துகிறேம்.

---

மாநுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயத்(து)
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காகவன்றே
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணராரந்தோ.

❀ ❀ ❀

சிவனரு வுருவுமல்லன் சித்தினே டசித்து மல்லன்
பவமுதற் றெழில்க ளொன்றும் பண்ணிடு வானு மல்லன்
தவமுத லியோக போகந் தரிப்பவ னல்லன் ருனே
இவைபெற வியைந்து மொன்று மியைந்திடா வியல்பினுனே,

—சித்தியார்

கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ
விநாயகப் பெருமானை
பிரார்த்திக்கின்றோம்.

# சீமாட்டி ஜவுளி சமுத்திரம்

158, நவீன சந்தை
மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

தொலைபேசி : 8096

அன்பளிப்பு

# தேவராணி ஸ்ரோர்ஸ்

6, ஸ்ரேசன் ரோட்,

கொச்சிக்கடை.

கிளை :

## தேவராணி கிரைண்டிங் மில்

16, சேர்ச் ரோட் : : தங்கொட்டுவ.

அன்பளிப்பு



# லட்சுமி ஸ்ரோர்ஸ்

4, நீர்கொழும்பு ரோட்,

தங்கொட்டுவ.

அன்பளிப்பு

## முருகன் ஸ்டோர்ஸ்

நா. ஆறுமுகம்

இல. 30, நீர்கொழும்பு ரோட் : தங்கொட்டுவ

கிளை : **நாதன் ஸ்ரோர்ஸ்**

இல. 11, நீர்கொழும்பு ரோட்,

தங்கொட்டுவ.

அன்பளிப்பு



## பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்

251 (107), காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

## ஸ்ரீ முருகன் மருந்துச்சரக்கு மளிகை

207, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

கணபதி

ஸ்டோர்ஸ்

18, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 225

அன்பளிப்பு :

இ. வே. ஆறுமுகம்

307, பிரதான வீதி

பசறை

அன்பளிப்பு



V. M. சண்முகம்

85, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்

தொலைபேசி : 657

அன்பளிப்பு

↓

எஸ். என்.

சகோதரர்கள்

23, சென் ஜோன்ஸ் றேட்

கொழும்பு-11

தொலைபேசி: 23321

அன்பளிப்பு



நாதன் ரேடர்ஸ்

18, சென்ஜோன்ஸ் றேட்

கொழும்பு-11

தொலைபேசி: 21005

அன்பளிப்பு :

O

ஒபாதர அன் கோ.

15, சென் ஜோன்ஸ் றேட்

கொழும்பு-11

தொலைபேசி : 25685

அன்பளிப்பு

★

நியு வாசன்

ரேட் சென்ரர்

121, 5-ம் குறுக்குத் தெரு

கொழும்பு-11

தொலைபேசி: 25567

வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய
இராச கோபுர மகா கும்பாபிஷேகம்
இனிது நிறைவு பெறப்
பிரார்த்திக்கின்றோம்.

# நியூ கவிதா எம்பக்ஸ்

59, செட்டித் தெரு,

கொழும்பு-11

தொலைபேசி: 24260

தலைமையகம் :

178 / 4, மத்திய வீதி

கொழும்பு - 12

தொலைபேசி: 24995

சிவமயம்

# ஆத்ம குரல்

" கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் "

" கோபுர தரிசனம் கோடி புண்ணியம் "

புராண, காப்பிய காலங்களின் வரலாற்றுத் தொடர்புள்ள பழம் பெரும் புண்ணிய பூமி நம் காரையம்பதி. குறுமுனித் (அகத்தியர்) தீவு என்பதும் காரைத்தீவு என்பதும் ஒரே இடத்தையே குறிக்கலாம் என அண்மைக்கால வரலாற்று ஆய்வுகள் ஓர் புதிரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன. இவ்வாலயத்தின் தென் மேற்குப் புறமாக அமைந்துள்ள வேரப்பிட்டி எனும் பகுதி வியத்தகு வரலாற்றுப் புதையல்களைக் கொண்டுள்ளது என புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். எம் தலைமுறைப் பெருமை இன்னமும் மண்மடக்கிய மறைபொருள் என்பதை அறிவீர்.

இராமநாதர் தம்பையா அவர்களின் இதயத்தில் குடிபுகுந்து தனக்கென கும்பரப்புலத்தில் ஆலயம் அமைப்பித்து, எம்மவரைக் குடியிருக்க அனுக்கிரகித்து, இன்று கோடி புண்ணியம் பெற்றுய்ய திருவருள் புரிந்து கொண்டிருக்கும் கற்பகப் பிள்ளையார் ஆலய இராஜ கோபுரம் இப்பகுதி மக்களுக்கு இத் தலைமுறையில் கிடைக்கப்பெற்ற ஓர் சகாப்த தரிசனமாகும்.

இம் மகா கோபுரப் பணியின் நீண்ட காலப் பின்னணியில் அயராது தொண்டாற்றிய, தொண்டாற்றும் திருப்பணித் தொண்டர்கள் சிலரின் ஞாபகம் நம் நெஞ்சை அள்ளுகின்றது. இவ்வரிசையில் விநாயகர் திருவடி சேர்ந்த அமரர் முருகேசு சிதம்பரப்பிள்ளை அவர்கள் எமது தலைமுறையின் மூத்த முன்னோடித் தொண்டர் என்பது மெய்யடியார்கள் அறிந்ததே.

இவ்வாலயத்தின் பிரதம கர்த்தாவான அமரர் இராமநாதர் தம்பையாவின் மருமகனான சிதம்பரப்பிள்ளை அவர்கள் தம் பரம்பரைக் கோவிலுக்கு ஓர் கோபுரம் அமைக்க திருவருளின் தூண்டுதல் பெற்றார். இவரது தகப்பனார் சண்முகம் முருகேசு அவர்கள் கட்டுவித்த அற்புத திருஉருப் பெற்றமைந்த வைரவ சுவாமியை மெய்மறந்து பாடித் துதிக்கிறோம் அல்லவா? வைரவருக்கு முன்னால் நின்று விம்மி விம்மி நெக்குருகி நின்ற அமரர் சிதம்பரப்பிள்ளை அவர்களை நானும் எனது நண்பர்களும் பல தடவைகள் பார்த்து தேம்பியதுமுண்டு. கோபுரம் கட்டும் ஆவலுக்கு அவ்விடத்திலேயே அவருக்கு அனுக்கிரகம் கிடைத்தமை பற்றிப் பலர் அக்காலத்தில் பேசிக் கொண்டதுமுண்டு.

1945-ம் ஆண்டு புனித அத்திவாரக்கல் நாட்டுவதற்குப் பல பக்தர்களின் பரவசத்தின் மத்தியில் அவர் எடுத்த சமயச் சடங்குகள் இன்றும்

எம்மில் பலரைக் கண்ணீர் மல்கச் செய்கின்றது. இதனைத் தொடர்ந்து பண்டிகைக் கட்டிட வேலைக்கட்டம் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவில் பூதானம் செய்ய வேண்டி, கர்ம வீரர் விஞேபாஜீ அவர்கள் இந்தியா முழுவதும் கால்நடையாகச் சென்று பூமிதானம் பெற்றுக் கொண்டமை யாவரும் அறிந்ததே. அதே போன்று கர்ம வீரன் சிதம்பரப் பிள்ளை அவர்களும் இவ்வூரின் ஒவ்வொரு மெய்யன்பரையும் திருவருள் துணைகொண்டு நேரில் சந்தித்து, பொருள் உதவி பெற்று தானும் மெய் வருந்தி அயராது எடுத்த கருமத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். கால் நடையாக நடந்து ஒவ்வொரு வீட்டிற்கும் பிடி அரிசிக் குட்டான் களை வழங்கி காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டார். அவருடைய காலத்தில் இப் பிடி அரிசிக்கு ஈடு இணையான காணிக்கை வேறு எதுவும் இல்லையென மெய்யன்பர்கள் கருதினர்கள். மேலும் இவ்வூர் வாசிகள் ஒவ்வொருவரும் இப்பணியில் பங்குகொள்ள வாய்ப்பளித்த புண்ணிய கைங்கரியத்தை யாம் இன்றும் என்றும் மறக்கிலோம்.


நம்மிற் பலர் சிறுர்களாகவும் இளைஞர்களாகவும் வாரிவளவுப்புழுதியை அள்ளிக் கிள்ளி அலைந்த அக் காலத்தில் தெய்வப் பிரேமையுடனும், எளிமையின் எழிலுடனும் (செம்பரியார்) முழங்காலுக்கு மேல் தூய வெண்ணிற நாலு முழம் கட்டி, கமக்கட்டினுள் காய்ந்து நரைத்த குடை யுடன் கோவிலின் முன்றலில் காட்சி தருவார். ''செம்பரிக்கு உண்மையில் விசர்'' என்றவர்களும் அப்போது இருக்கத்தான் செய்தார்கள். 'பொடி யன்கள், இன்று சுண்ணுகத்து கல் வண்டில்கள் வரும்; எல்லோரும் அரோகராப் போட்டுக் கொண்டு உதவிக்குப் பக்கத்தில் நிற்க வேண்டும்; ஐயரிடம் மோதகத்துக்கு சொல்லி இருக்கிறன்; விட்டுடாதேய்ங்கோ' இயல்பாகவே எம் அனைவருக்கும் மோதகத்தில் அமோக மோகம். செம்பரி யாருக்கும் எல்லாம் வெற்றி.

இன்றைய வாரிசுகளின் நிறைவுப் பணிக்கு ஆத்ம குரல் கொடுத்த அமரர் சிதம்பரப்பிள்ளை என்றென்றும் திருவடி நிழல் வாழ்க. அவரின் தெய்வத் திருப்பணியை சிகரப்படுத்தி ஊரிலும் உலகத்திலும் எம்மவர் அனைவருக்கும் பக்திப் பெருமை தேடித்தந்த சகல மெய்யன்பர்களுக்கும் முதன்மையாக ஆலய இராஜகோபுர நிர்வாகிகளுக்கும் எம் நன்றிகள் உரித்தாகுக. வாரிவளவானின் வானளாவிய இராஜ கோபுரம் உங்கள் கர்ம வீரத்தின் மெய்சிலிர்க்கும் சின்னமாகும்.

'' நினைக்கப் படைத்த நின்னருள்
நிலைத்து நிற்க எமக்கருள் ''

மு. திருநீலகண்டசிவம்
'பொன்னுச்சி வளவு'
தங்கோடை.


தகவல் : சின்னிமுருகர் அன்னமுத்து



இராசகோபுரம் அமைப்பதற்கு முன் உள்ள ஆலய முன்புறத்தோற்றம்



6-6-81 ஆரம்பமான இராசகோபுர கட்டிட விழா



கட்டிட வேலைகள் ஓரளவு முடிவுற்ற நிலையில்

அன்பளிப்பு :

## கோல்ட் ஸ்ரார் ரெக்ஸ்ரைல்ஸ்

95, 3-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11.

அன்பளிப்பு :

## கசியோ ரெக்ஸ்ரைல்ஸ்

கெய்சர் வீதி,
கொழும்பு - 11.



மகா கும்பாபிஷேகம் இனிது நிறைவுபெற
விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

## கந்தையா ஸ்டோர்ஸ்

நாத்தாண்டியா.

அன்பளிப்பு



## ஐங்கரன் ஸ்டோர்ஸ்

கொட்டடிச் சந்தி,

140, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

## வேலுப்பிள்ளை இந்திரன்

வாரிவளவு,

காரைநகர்.

அன்பளிப்பு



# கஜநிதி ஸ்டோர்ஸ்

கண்டி வீதி : : கிளிநொச்சி.

தொலைபேசி : 313

அன்பளிப்பு

# M. C. A. சமாட்

பொலன்னறுவ.

அன்பளிப்பு :

# செல்லப்பாபிள்ளை அண் சன்

333, லாயட்ஸ் புரோட்வே,

கொழும்பு - 14.

தொலைபேசி : 28645 — 33112

கிளை :

↓

# செல்லப்பா ஸ்ரோர்ஸ்

காரைநகர்.

தொலைபேசி : 802

# கும்பாபிஷேகம்

-பேராசிரியர் கா. கைலாசநாத குருக்கள்
தலைவர், இந்து நாகரிகத் துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பிரதிட்டை என்றால் என்ன? இக்கிரியையில் யாகசாலை எதற்காக? கும்பங்கள் எதற்காக? குண்டங்கள் அமைத்துத் தீ வளர்ப்பது யாது காரணம் பற்றி? நேரே திருவுருவிலேயே இறைவனைத் தோற்ற வைக்காது கும்பம், குண்டங்கள் முதலிய உபாயங்களைக் கையாளும் நோக்கந்தான் யாது? என்ற கேள்விகளுக்கு உரிய வாறு விடை கூறும் முகமாகக் கும்பாபிஷேகக் கிரியையமைப்பையும், அடிப்படைத் தத்துவத்தையும் சுருக்கி அறியத் தருவது இக் கட்டுரை.

எங்கும் நிறைந்தவன் இறைவன். அவ்வாறிருந்தும் அவனைத் தரிசித்தல் வேண்டிப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கோவிலையே நாடிச் செல்கின்றனர். இதனால் 'அவன் எங்கும் உளன்' என்ற சிறப்புக் குன்றுமோவெனின், ஒருபொழுதும் குன்றாது. சிக்கலான இக்கேள்விக்குத் தெளிவான விடை பகருகின்றது சிவஞான சித்தியார் (12, 3, 4). பசுவின் உடலெங்கணும் பால் பரந்து சுவறியுள்ளது. எனினும் அது முலைகளின் வழியே தான் வெளியேறுகின்றது, அதே போன்று எங்கும் நிறைந்து நிற்கும் இறைவன் குறிப்பிட்ட இடத்திலேயே சிறப்பாக வெளிப்போந்து அருள் சுரப்பான். இவ்வாறு அருள் பெருக்குமிடம் குருலிங்க சங்கமமெனச் சமய நூல்கள் கூறும், இம் மூன்றனுள் இலிங்கத்தில் இறைவன் தோற்றியருளுதலையே ஆலய வழிபாட்டில் நாம் உணருகின்றோம்.

இலிங்கம் என்பது அடையாளம் எனப் பொருள் பெறும். இவ்வடையாளம் சிவபெருமானை மட்டிலும் சிறப்பாகச் சுட்டுதல் பற்றிச் சிவலிங்கம் எனவும் படலாயிற்று. பரம்பொருளான சிவபிரானின் இயல்புகளை உணர்த்தும் அடையாளமான சிவலிங்கம், 'அப்பரமன் இத்தகையன்' என எமக்கு விளக்கி நிற்கின்றது. அவ்விளக்கத்தின் சுருக்கம்: 'உருவமில்லாத எம்பெருமானை எவ்வாறு கிரகிப்போம்' என ஏங்கி அலமந்து நிற்பார்க்கு உருவங்காட்டியும், 'எம் போன்று உருவம் வாய்த்தவன் இவன்' எனத் தற்பெருமை தோன்ற இறுமாந்து நோக்குவார்க்குக் கை, கால் முதலிய உறுப்புக்களைத் தெளிவாகப் பெறாத அருவ நிலையில் தோன்றியும் அருவுருவமாக விளங்குவது இலிங்கத் திருமேனி'' என்பதாம். இத்துணைப் பெருமை வாய்ந்த இலிங்கத் திருமேனி அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பாய்ப் பரமன் விளங்கும். உயர் தத்துவத்தை உணர்த்துவது. சிவபிரானுக்கு உரித்தான இச் சிவலிங்கத் திருமேனி இல்லாத கோவில் கோவிலாகாது. அரசன் இல்லாத நாடு போன்றதே இலிங்கத் திருவுருவமில்லாத திருக்கோவில். பாரத நாட்டில் ஆகம முறைப்படி அமைந்த கோவில்களில் இலிங்க ஸ்தாபனம் இல்லாத கோவிலைக் காணலரிது. கோவில்களில் எல்லாம் இறைவன் தம்மைச் சுட்டும் அடையாளமான இலிங்க மூர்த்தியாகிக் கருவறையில் மூல விக்கிரகமாய் முதன்மைபெற்று

எழுந்தருளுகின்றான். சிவபிரானுக்கல்லாது ஏனைய மூர்த்திகளுக்கு நிறுவப்படும் மூல விக்கிரகம் அருவுருவமான இலிங்க வடிவில் அமையாததாய் உருவ நிலையிலேயே உபாயமாக நிறுவப்படுதல் உபசார வழக்கு.

பாரெங்கணும் நிறைந்து பரந்து விளங்கும் பரமனை, பால் கறப்பவன் பசுவின் முலைகளினூடே பாலைத் தோற்றுவிப்பது போன்று, எவ்வாறு குறிப்பிட்ட ஓரிடத்தில் வெளிப்படுவது? இவ்வாறு வெளிப்படுத்தும் வழிகளையே ஆகமங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. வெளிப்படுத்தும் அவ்வரிய நிகழ்ச்சியை நிகழ்த்துபவனே அருச்சகன். கல்லில் வடிக்கப்பட்ட வடிவத்தில் ஆகமங் கூறும் வழியைக் கடைப்பிடித்தே இறைவனை எழுந்தருளச் செய்கின்றான். இது நிகழுமாற்றைச் சிறிது விரிவாக நோக்குவதற்கு முன் பிரபஞ்ச அமைப்பைச் சற்று நுணுகி அவதானித்தல் பயன் தரும். பிரபஞ்சத்தில் உள்ள பொருள்களனைத்தையும் எட்டுப் பிரிவுகளுக்குள் அடக்கலாம். இவற்றிற்குப் புறம்பாய் பொருளொன்று உண்டு என்றால், அது இவையெட்டும் ஒருங்கு ஒன்றுசேரும் வண்ணம் அருவுருவம் தாங்கும் இறைவனே ஆகும். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி எனப்படும் ஐந்து பூதங்களும் இவற்றுக்குப் புறம்பாய் இருந்து இவை விளங்கவும் வாழவும் ஆற்றல் பெருக்கும் சூரியனும் சந்திரனும், இவ்வேழனின் வேறாய் நின்று இவற்றை உணரும் எசமானனும் ஆகிய எட்டுமே இப்பிரிவுகள். பிரபஞ்சம் முழுவதும் இறைவன் நிறைந்து நிற்பன் ஆதலால் இப்பிரபஞ்சத்தின் கூறுகளான இவ்வெட்டுப் பொருள்களிலும் இறைவனை உணருகின்றோம். இவ்வெட்டு அம்சங்களையுமுடைய பரமன் இதுபற்றி அட்டமூர்த்தி எனச் சிறப்புப் பெற்றவன். எனவே, இவ்வெட்டு அம்சங்களில் நிகழ்த்தும் வழிபாடு அவனது வழிபாடு ஆகும். இவ்வம்சங்களில் இறைவன் எழுந்தருளலைக் காணல் அவனைக் காணலேயாகும். இவ்வடிப்படையிலே தான் சிவாசாரியார் இறைவனைச் சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருளுவித்து அங்கு என்றும் சாந்நித்தியமாக விளங்கும்படி செயலாற்றுகின்றார். இவ்வாறு நிகழும் கிரியையே பிரதிட்டை எனப்படும்.

பிர என்னும் பகுதிக்குச் சிறப்பாக என்றும், நன்கு புலனாகும்படி என்றும், திஷ்ட என்னும் பகுதிக்கு நிற்றல் என்றும் பொருள் உண்டு. எனவே, பிரதிஷ்டை என்னுஞ் சொல் 'ஏனைய இடங்களில் புலனாகுவதைக் காட்டிலும் சிறப்பாக நிலை நிற்றல்' என்றும், 'ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும்படி நிலை நிற்றல்' என்றும் பொருள் பெறும். இந்நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிட்டை ஆகும்.

பிரதிட்டை என்னுங் கிரியை கும்பாபிஷேகம் என்னும் மறுபெயரால் வழங்கி வருகின்றது. இச்சொல் பிரதிட்டை என்னுஞ் சொல் போலக் கிரியையின் விளைவைச் சுட்டாது, கிரியையின் ஓரமைப்பாகிய முழுக் காட்டுதலை மட்டும் குறித்து நிற்கின்றது. பிரதிட்டை என்னுங் கிரியையில் குடத்தில் நிரப்பப்படும் புனித நீரால் இலிங்கத் திருமேனிக்கு நிகழ்த்தும் நீராட்டுதலே சிகரமான அம்சம். சிகரமான இக் கும்பாபிஷேகமே – குடமுழுக்கே–பிரதிட்டையே. இறைவனை அகன்ற பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒருவழிப் படுத்தி எழுந்தருளிநிலை நிற்கச் செய்யும் செயலைச் சுட்டுகின்றது.

ஆகமங்கள் கூறும் இவ்வுபாயத்தினை குடநீரால் முழுக்காட்டல் மூலம் இறைவனை எழுந்தருளி நிலைநிறுத்தும் முறையின் சிறப்பினை, வேதாகமங்களைத் துணைகொண்டு நோக்குமிடத்து, இக்கிரியை முறையின் சிறப்பும், உயர் தத்துவமும் புலனாகும். அதைச் சற்று நுணுகி நோக்குவோம்.

எங்கும் நிறைந்த இறைவன், புலன்களால் கிரகிக்கப்படாத பெருமான், எமக்கிரங்கி, திருவருள் பாலித்துப் படிப்படியாக எங்கட்குப் புலனாகிக் கிட்டும்

முறையை உபநிடதங்கள் எடுத்துரைக்கின்றன. இதைத் துணையாகக் கொண்டு வகுத்தமைக்கப்பட்டுள்ளது பிரதிட்டை என்னும் கும்பாபிஷேகக் கிரியையாகும். சர்வ வியாபி எனச் சுவேதாசுவதரங் கூறும் பகவான் முதலில் சிறு அளவி மட்டுமே புலனாகும் வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகின்றான். ஆகாயத்தாலும் இந்திரியங்களால் செவ்விதாகக் கிரகிக்கப்படாமையால் வாயுவாகச் சற்று விரிகின்றான். ஆகாயத்திலும் பார்க்க வாயு சிறிது அதிகமாக உணரப்படக் கூடியதெனினும் அது கண்ணால் காண்பதற்கு அரிதான தொன்று அன்றோ! இதை அடுத்த நிலை அக்கினியாக விரிந்த நிலை, இது கட்புலனாவதே. இது தூய்மை பெருக்கி எம்மை ஈடேற்ற வல்லது. அக்கினியைப் பெரிதும் நெருங்கிப் பேணிப் பாதுகாத்துத் தொடர்ச்சியாக வழிபடுதலின் இன்னல்கள் பல உள. இவ்வின்னல்கள் எதுவுமில்லாது தானே எல்லாமாய் விளங்குவது நீர் என்றாலும். கிரகிக்கத் தக்கவாறு நீரை ஒரே நிலையில் நிலைபெற நிறுத்தி அங்கு இறைவனைக் கண்டு தொடற்சியாக வழிபடுதல் எளிதன்று. இதுகாறும் கூறியவற்றினின்றும் வேறானது ஐந்தாவது பொருளாகிய மண். இதனிடத்து இறைவனை நிலைநிறுத்தித் தொடற்சியாகக் கண்டு அவனைக் கிரகித்தல் எமக்கு நன்கு கைகூட வல்ல நிலை, இவ்வாறு இறைவன் அருவ நிலையினின்றும் இழிந்து ஆகாரம், வாயு, தீ, நீர், மண் ஆகிய ஐந்திலும் நுண்மை அகன்று படிப்படியாகப் பருமை வளரும் வகையில் விரிந்து விளங்குகின்றான். இதை தைத்திரிய உபநிடதம்,

"ப்ரா் ஹ்ண ஆகாச: ஸம்பூத:
ஆகாசாத் வாயு:
வாயோ ரக்தி:
அக்நே ராப:
அத்ப்ய: பிருத்வீ"

என எடுத்தியம்புகின்றது.

இறைவனை முற்றிலும் புலனாகாத நிலையிலிருந்து, பால் கறப்பவன் பசுவுடலெங்கணும் பரந்து சுவறிய பாலை முலைகளில் வெளிப்படச் செய்வது போன்று, விக்கிரகத்தில் வெளிப்பட வைப்பதற்காக, இதுகாறும் கூறிய விரிவு முறை வழிநின்று விண், காற்று, நெருப்பு நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்துங் கிரிகைகளே கும்பாபிஷேகப் பெருங்கிரிகையின் அம்சங்களாய் விளங்கக் காண்கிறோம், ஆகாய வெளியில் அமைவது யாகசாலை, அங்கு வளர்க்கப்படும் அக்கினியும் அதனோடு நெருங்கிய தோழமை பூண்ட வாயுவும் குண்டங்களில் ஒருங்கு உறையக் காண்கின்றோம். வேதியின் மீதுள்ள குடத்தில் இருப்பது நீர். இவை நான்கிலும் புலனாகாது எங்கும் பரந்து நின்ற இறைவனைக் கிரியைகள் மூலம் படிப்படியாக வெளியாக்கிப் புலனாக வைத்தலே யாகசாலையில் நிகழும் கும்பாபிஷேகக் கிரியையாகும். இக் கிரியையிலே, யாகசாலையில் குண்டங்களில் வளருந் தீயில் இறைவன் தோற்றமடைப்பிக்கப்பெறுகின்றான். மேடையில் நிறுவப்பட்ட கும்பங்களின் நீரிலும் கிரியைகளின் சிறப்பினால் மேலும் வெளிப்படுகின்றான், இவ்வாறு வெளிப்படும் நிகழ்ச்சி இறுதியில் மண் அம்சம் வாய்ந்த திருவுருவத்தில் வந்து முடிவெய்துகின்றது. முன்னர்க் கூறிய எட்டு அம்சங்களுக்காகத் தனித்தனியே அமைக்கப்பட்ட குண்டங்களில் சாந்நித்தியமானவனை, நீர் நிறைந்த கும்பத்தில் வெளிப்பட்டு நிற்கும் அவனை, மண் இயல்பு வாய்ந்த விக்கிரகத்தில் ஒடுக்கி அங்கேயே நிலைபெறச் செய்த பின்னரே, அவன் அவ்விக்கிரகத்தில் பாரெங்கணும் புலனாவதைக் காட்டிலும் சிறப்பாக வெளிப்பட்டு பிரதிட்டிக்கப்பட்டவனாய் விளங்குகின்றான். இதுபற்றியே, அறவே கிரகித்தற்கரிய இறையை, எளிதில் கிரகித்தற்கு முடியாதவாறு ஆகாயம் நுண்ணியதாய் இருத்தல் பற்றி, முதன்முதல் புலனை ஆகாயத்தில் நிறுத்தி வழிபடுவதற்கு வகையறியாராய் அதையடுத்து, கட்புலனாகாத வாயுவிலும் பொருத்தி வழிபடும் ஆற்றல் அற்றவராய், புலனாகித் தோற்றும் தன்மையனாயும், ஒரே வழிப் புலனாகாது திடீரென மறைந்துவிடும் இயல்பினனாயும் விளங்கும் அக்கினியிலும் நிறுவி வழிபடுதலில் திருப்தி காணாதவராய், வற்றும் இயல்பு காரணமாக என்றும் தொடர்ந்து நிலைபெறாத எனவே பிரதிட்டைக்கு ஏற்றவாறு பொருந்தாத – நிலையினதாதல் பற்றி, நீரிலும் இறைவனைத் தாபித்து வழிபடும் வாய்ப்புப் பெறாதவராய், மண்ணிலேயே இறைவனை நிரந்தரமாக நிறுவி வழிபடும் ஒரே வழியைக் கடைப்பிடிக்கும் நிலையுற்றோம். எனவே, என்றும் வெளிப்பட்டுப் புலனாகி விளங்கும் வண்ணம் இறைவனை

நிறுத்திப் பிரதிட்டை செய்யும் பொருட்டுத் திருக்கோவிலில் நிறுவுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் திருவுருவங்கள் மண்ணுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக விளங்குகின்றன. இவ் விக்கிரகங்களிற் சில மண்ணோடு உறவு கொண்ட மலைகளில் பிறந்தெடுத்த கருங்கல்லில் சமைக்கப்படுவன. சில மண்ணிலே அகழ்ந்தெடுக்கப்படும். ஐவகை உலோகங்களில் வடிக்கப்படுவன. சில மண்ணிலே வளரும் மரங்களிற் செதுக்கப்படுவன. இன்னுஞ் சில மண், சுண்ணாம்பு முதலியன கலந்த சுதையால் அமைவன. இவ்வாறு மண்ணின் அம்சத்தை மட்டுமே கொண்டு அமையும் விக்கிரகத்தை நிறுவி அதிலே இறைவனைக் குடிபுகுத்திச் சிறப்பாகத் தோற்றி விளங்க வைக்குங் கிரியையில் தோற்றுவித்தலை நேரே விக்கிரகத்திலேயே நிகழ்த்துதலை விடுத்து, அவன் படிப்படியாக வெளிப்படும் முறையே இலகுவான வழியென உணர்ந்து, அதையே உபாயமாகக் கையாண்டு, இதுகாறும் சுட்டப்பட்ட விண், வாயு, தீ, நீர் ஆகியவற்றைக் கருவியாகக் கொண்டு இறைவனைப் படிப்படியாக அவற்றினூடே விக்கிரகத்தில் சுலபமாக எழுந்தருளுவிக்கும் கும்பாபிஷேகப் பெருங் கிரியையில், ஆகாய ரூபமான யாகசாலையிலும், குண்டங்களில் எரி வளரக் காரணமாகி நின்று அக்கினியினின்றும் வேறுபடாது இணைந்து நிற்கும் வாயுவிலும் அங்கு வளரும் அக்கினியிலும் மேடையில் அமைக்கப்பட்ட கும்ப நீரிலும் இறைவனைப் பாரணைத்தையும் கடந்து நிற்கும் துவாசதாந்தத்தில் இருந்து இழிந்து வந்து தோற்றம் பெறுமாறு எழுந்தருளச் செய்து, ஆவாகித்து, பூசனை புரிந்து, இத்தோற்றம் முழுவதையும் கிரியை முடிவில் மண் இயல்பினதான திருவுருவத்தில் ஒடுக்கி அங்கு நிலை பெற வைத்து, இவ்வொடுக்கம் நிறைவுறக் கும்ப நீரால் விக்கிரகத்தை முழுக்காட்டுவதன் மூலம் கும்பாபிஷேகம் நிகழ்த்தும் சிவாசாரியார் எங்கும் பரந்த இறைவனின் வியாபகத்தினை, பசுவின் முலைகளில் பால் வெளிப்படுவது போன்று திருவுருவத்தில் வெளிப்படும் வண்ணம் ஒருமுகப்பட்டு உறைந்து நிறைந்து விளங்கச் செய்கின்றார்.

கும்பாபிஷேகம் என்னும் இக்கிரியையின் பின்னர், எங்கும் பரந்து நிற்கும் இறைவன் ஏனைய இடங்களில் இருப்பதைக் காட்டிலும் திருவுருவத்தில் விசேட சாந்நித்தியம் பொருந்தி விளங்குகின்றான். இந்நிலை கும்பாபிஷேகத்தின் பின் என்றுந் தொடர்ந்து விளங்கும் நிலை. இந்நிலையிற்றான், அபிடேகம், அலங்காரம், நிவேதனம், அருச்சனை, உபசாரங்கள் முதலிய ஆராதனைகளால் இறைவனை வழிபடத் தொடங்குகின்றோம். இவ்வம்சங்கள் கொண்ட வழிபாடு சுருக்கமான நித்தியக் கிரியைகளாகவும், விரிவான நைமித்தியக் கிரியைகளாகவும் திருக்கோவில் வழிபாட்டில் என்றென்றும் நிரந்தரமான இடம் பெறுவன.

இதுகாறும் கூறப்பட்ட கும்பாபிஷேக முறை கோவிலே இல்லாத இடத்தில் புதிதாகக் கோவிலெடுத்து விக்கிரகத்தை நிறுவி முதன்முதல் நிகழ்த்தும் அநாவர்த்தனப் பிரதிஷ்டை என்னும் 'முதற் கும்பாபிஷேகம்' பற்றியது.

பிரதிட்டை ஆகி, நெடுங்காலம் வழிபாடு நிகழ்ந்து வருங் கோவிலில் கருவறையின் பகுதிகள் பழுதடைந்து சிதிலமடையின், மூல விக்கிரகத்தில் சாந்நித்தியமாய் விளங்கும் இறைவனை, உரிய கிரியைகளால் கும்பத்தில் எழுந்தருளச் செய்து, வேறு ஓர் இடத்லில் தற்காலிகமான 'பால ஆலயம்' கற்பித்து, அங்கு நிறுவப்படும் மரத்தால் ஆன சிலையிலோ, திரையில் எழுதப்பட்ட திருவுருவிலோ ஒடுக்கி, கோவிலில் உள்ள பழுதுகளை அகற்றிச் சீராக்கிய பின், பால ஆலயத்தில் இதுகாறும் சாந்நித்தியம் கொண்டருளிய இறைவனை மீண்டும் கும்பத்தில் ஆகருஷித்து, யாகசாலை அமைத்து, அங்கு அக்கும்பத்தை ஸ்தாபித்து, யாகக் கிரியைகளை முறைப்படி நிகழ்த்திய பின் திருத்தியமைக்கப்பட்ட கோவிலின் கருவறையில் முன்னரேயிருந்த மூல விக்கிரகத்தில் இறைவனை முன்போல் சாந்நித்தியங் கொண்டருளும்படி சேர்ப்பித்தல் முறையாகும். இவ்வாறு நிகழும் கும்பாபிஷேகம் ஜிர்ணோத்தாரண கும்பாபிஷேகம் எனவும், புநர் ஆவர்த்தனப் பிரதிஷ்டை எனவும் சுட்டப்படும். ☆

---

ஜிர்ணம் — பழுதடைந்த (கோவிலை); உத்தாரணம் — மீட்டல் (திருத்துதல்).
புநர் — மறுபடியும்; ஆவர்த்தனம் — திருப்பிக் கொண்டு வருதல்.

அன்பளிப்பு

# சிவகுமார் ஸ்டோர்ஸ்

282, ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்

தொலைபேசி : **7738**

அன்பளிப்பு

## C. நடேசன்

## ரேடிங் கம்பனி

29, காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்

தொலைபேசி : 7467

அன்பளிப்பு

## நாதன்

## கிறைண்டிங்மில்

17-A, மெயின் வீதி,

கொச்சிக்கடை.

அன்பளிப்பு :

# அன்னமலர் பேக் கவுஸ்

வேட்பாடி - காரைநகர்

அன்பளிப்பு

## லிங்கம் கவுஸ்

6, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

அன்பளிப்பு :

## செ. அம்பிகைபாகன்

68, கோவில் வீதி
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்



காரைநகர், வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக நிகழப் பிரார்த்திக்கின்றோம்.

# நேரு அச்சகம்

282, 284, ஆட்டுப்பட்டித் தெரு

கொழும்பு-13

தொலைபேசி : 31588


வாரிவளவு விநாயகப் பெருமானின்
மகா கும்பாபிஷேக நன்னாளில் எல்லோரும்
அவனருள் பெறப் பிரார்த்திக்கின்றோம்.

# ரஞ்சனாஸ்


17, 18, 18A, நவீன சந்தை

யாழ்ப்பாணம்

தொலைபேசி : 8015



தேக்கு மரத்தினாலான ஆலயத் தேரும் அதன் சிற்பவேலையில்
ஒரு பகுதியும்



இராசகோபுரத்திற்குத் தேவையான
செங்கற்களை பக்தர்கள் சிரமதான
மூலம் லொறியில் இருந்து
இறக்குகின்றனர்

தென் இந்திய சிற்பி
திரு. K. இராமமூர்த்தி
இராசகோபுரத்தை கட்டிக்
கொண்டு இருக்கின்றார்

அன்பளிப்பு

# பிப்ரின்ஸ் டிரேட்
## அன்ட்
# சப்ளாஸ்

143, மலிபன் வீதி

112, 4-ம் குறுக்குத் தெரு : கொழும்பு-11

தொலைபேசி: 28509, 26389

அன்பளிப்பு

# ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

364, பிரதான வீதி

பசறை

வாரிவளவு கற்பக விநாயகரின் மகா கும்பாபிஷேகம்
இனிது நிறைவுபெறப் பிரார்த்திக்கின்றோம்.

# ஜெகதீசன்ஸ்

பிரிஸ்டல் ஹோட்டல் பில்டிங்

அறை இல. 39

51, யோக் வீதி - - கொழும்பு-1

அன்பளிப்பு

K. நடராசா

கருங்காலி

காரைநகர்

அன்பளிப்பு

சிவகாந்தா ஸ்டோர்ஸ்

65, 66, நவீன சந்தை

யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

ஜெகன் றேடர்ஸ்

112, 4-ம் குறுக்குத் தெரு

கொழும்பு-11

அன்பளிப்பு

S. V. இராமலிங்கம்

147, கடற்கரைத் தெரு

நீர்கொழும்பு

அன்பளிப்பு

# கலா ரேடிங் கம்பனி

*134, 2-ம் குறுக்குத் தெரு*

*கொழும்பு-11*

தொலைபேசி: 25250 — தந்தி: 'கலாதேவி'

உ
விநாயகப்பெருமான் துணை

# விநாயகர் பரத்துவம்

—செல்லப்பா ஆறுமுகம்,
காரைநகர்.

இவர் தோற்றத்தைப் பல புராணங்கள் பல வகையாகக் கூறுகின்றன. நமக்கு ஆதாரமாகக் கொள்ளத்தக்க வகையில் கூறும் புராணங்கள் மூன்று உள்ளன. அவை கந்தபுராணம், காஞ்சிப் புராணம், விநாய புராணமாகிய மூன்றுமாகும். இவற்றைவிட. மிகப்பலத்த ஆதாரமாகவுள்ளது நம் முதற் திருநெறிய தமிழ் ஆசானாகிய ஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிய தேவாரப்பாடலாகும்.

பரமசிவனும் பார்வதி தேவியாரும் ஒரு சமயம் திருக்கயிலையில் மந்திரங்கள் எழுதியிருந்த சித்திர மண்டபத்தைச் சேர்ந்தனர். அங்கே எழுதப்பெற்றிருந்த பிரணவத்தைத் திருக்கண்ணால் கண்டனர். சமஷ்டிப் பிரணவம் பிரிந்து ஆண்டவன் எழுத்தாகிய அகரம் ஆண் யானையாகவும், அம்மை எழுத்தாகிய உகரம் பெண் யானையாகவும் மாறின. இரண்டும் சேர்வது போல் காட்சியளிக்க விநாயகப் பெருமான் யானை முகத்தோடு தோன்றியருளினார். இதையே காஞ்சிப் புராணமும், கந்தபுராணத்து தட்ச காண்டத்தில் கயமுகன் உற்பத்திப் படலத்திலும் பாட்டுக்கள் ஆதாரமாகக் கூறுகின்றன, கந்தபுராணப் பாடல் பின்வருமாறு.

அக்கணத் தாயிடை ஐங்கரத் தவனுருள்
முக்கணல் வாயினன் மும்மதத் தாறுபாய்
மைக்கருங் களிறெனும் மாமுகத் தவன்மதிச்
செக்கர்வார் சடையனோர் சிறுவன் வந்தருளினன்.

இதையொட்டிய ஞானசம்பந்தப்பிள்ளையாரின் திருநெறித் தமிழ்ப் பாடலைக் கவனிப்போம்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

குறிப்பு :

ஆண் யானையும் பெண் யானையும் கூடிற்று என்பதும், சிவமும், சக்தியும் புணர்ந்தன என்பதும், அகர உகரங்களாகிய சிவமும் சக்தியும் கூடிச் சுத்த மாயாகாரியமாகிய நாதம் பிரணவமாயிற்று என்ற தத்துவார்த்தக் கருத்தை விளக்கவந்ததேயொழிய வேறில்லை. இஃதில்லாவிடில் உலகமேயில்லை.

இதையுணர்த்தவே மாணிக்கவாசக சுவாமிகளும்,

''தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ.''

என்று திருவாசகத்தில் உள்ள திருச்சாழலில் சொல்லியருளியிருக்கின்றார்கள்.

விநாயகப் பெருமானுடைய திருவுருவமே அபூர்வமானதும், அழகானதும், சுலபமாகக் கைக்கொள்ளக் கூடியதுமாகும். குழந்தைகள் போன்று குட்டைத் திருவடிகளும், தொந்தி வயிறுமுடையவர். இதை அவருடைய சோடச மந்திரங்களில் ஒன்று "ஓம் லம்போதராய" என்று போற்றுகின்றது. இவர் ஞானமயமானவர். இவரே தனது ஒரு கொம்பினாலே பாரதத்தை எழுதினாரென்ற வரலாறு உண்டு. சுலபமாக வழிபடத் தக்கவர் என்ற காரணத்தினாலேயே, ஒருக்கால் பொத்திப் பிடித்த மஞ்சள் மாவினாலோ அல்லது பசுவின் சாணத்தினாலோ அவரை ஆவாகனஞ் செய்து வழிபடுகின்றோம். இவர் மிகவும் பழமையானவரும், முதன்மையானவருமாவார். தனக்கு மேல் தலைவர் இல்லாதவர். அதனாலேயே மகா கணபதியென்றும், கணேசர் என்றும் போற்றுகின்றோம். இன்னும் வேதங்களுள் பழமையான ருக் வேதமே விநாயகரை "கணானாம் த்வாம் கணபதிம் அவா மஹே" என்று போற்றுகின்றது. இவரின் மகிமையைப் பற்றி தைத்ரீய ஆரண்யகத்திலும், கணபதி காயத்திரி மந்திரத்திலும் மிக நுணுக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

செந்தமிழ்ப் பாடல்களில், ஒளவையாரருளிய விநாயகர் அகவல் மிகவும் அதி உன்னத கருத்துக்களைக் கொண்டதுமன்றிச் சுலபமாகப் படித்துப் பாராயணஞ் செய்யக்கூடியதுமாகும். ஒளவைப் பிராட்டியாரைத் திருக்கயிலைக்குச் சேர்ப்பித்த மகத்துவமுள்ள பாடலாகும். இன்னும், பதினோராந் திருமுறையில் நம்பியாண்டார் நம்பி, கபிலர் முதலியோர் அருளிய விநாயகர் அருட்பாடல்கள் பலவுண்டு. விநாயக புராணத்திலுள்ள விநாயக கவசம் எம்மனோருக்கு ஒரு கவசமாக அமைக்கப்பட்டுள்ளது.

தேவர்களே, தாங்கள் உய்யும் பொருட்டும், அசுரர்களாகிய (ஆணவம், கன்மம், மாயை, அகங்கார மமகாரங்கள்) மலங்கள் அழிதற் பொருட்டும், சிவபெருமானைப் பன்முறை தவஞ்செய்து விநாயகப் பெருமானையும், முருகப்பெருமானையும் பெற்றார்கள். ஆனாலும் இத் திருக்குமாரர்களும் பரமசிவனேயன்றி வேறுபட்டவர்களல்லர். மாவு ஒன்றாயிருந்தாலும் தீன் பட்சணங்களைப் பலவாகச் செய்கின்றோம், அதே போன்று அம்சங்களும், தோற்றங்களும், நாமங்களும் வேறுபட்டவையாயும், பலவாயுமிருந்தாலும் எல்லாம் சிவனே.

சிவனுக்கும், முருகப் பெருமானுக்கும் மற்றும் ஐயனாருக்கும் சக்திகள் உள்ளன போன்று விநாயகருக்கும் அறிவு, தொழில் என்னும் சக்திகள் சித்தி, புத்தி என்னும் நாமங்களுடன் சூக்குமமாகவிருக்கின்றார்கள், இதை விநாயக புராணத்திலே பாடல் ஒன்று தெளிவாகக் காட்டுகின்றது.

எங்கள் முதற் தெய்வமும், குல தெய்வமுமாகிய வாரிவளவு கும்பரப் புலத்து கற்பக விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்தியாகிய வைரவப் பிள்ளையாருக்கும் விமானம், புதிய இராஜகோபுரம் இன்னும் வசந்த மண்டப, மணிமண்டப கலசங்களுக்கும் இன்று குடமுழுக்கு விழாவை இப்புண்ணிய நாளில் கண்டுகளிக்கின்றீர்கள். மார்கழி நீராடல், ஆருத்திரா விழா முதலிய அருள் மழையில் நனைந்து புளகாங்கிதங் கொண்டு திளைத்த அடியார்களாகிய நீங்கள், தை பிறந்ததும் இப் பெருஞ் சாந்தியைக் கண்டு களிக்கின்றீர்கள் என்றதும் நினைவுக்கு வரும் பாடல் இத்திருமுறைப் பாடலாகும்.

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம்நீ புரிநல் வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயார
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

நாயிற் கடையாய் நாயேன் விநாயகப் பெருமானின் பழ அடியார்களாகிய உங்கள் பாத கமலங்களில் இக்கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றேன். பெருமானை வழிபட்டு புண்ணியத்தைத் தேடுவோமாக.

★

அன்பளிப்பு

# க. நாகமுத்து அன் சன்

48, 50, பெரியகடை

யாழ்ப்பாணம்

தொலைபேசி : 7475

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகப் பெருமானின்
கும்பாபிஷேகம் கோலாகலமாக
நிகழ வேண்டுமென்று
பிரார்த்திக்கின்றோம்.



# பாசி ஹாட்வெயர்ஸ்

இல. 30, காங்கேசன் துறை வீதி

**சுண்ணாகம்**

தொலைபேசி : 304, 259

விக்கினங்களைத் தீர்க்கும்
விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகம்
சிறப்புற நிகழ பிரார்த்திக்கின்றோம்.


# த. க. பாலசிங்கம்

வர்த்தகர்

இங்கிரியாக



அன்பளிப்பு

# M. கந்தையா புத்திரர்கள்

பிரதான வீதி

நொச்சியாகம

கும்பாபிஷேகம் குறையேதுமின்றி
இனிது நிறைவேற விநாயகப் பெருமான்
திருத்தாள்களை இறைஞ்சுகின்றோம்.

# ஏ. வி. பி.

# பான்ஸி ரேடர்ஸ்

இல- 7, நவீன சந்தை : சுன்னாகம்.

தொலைபேசி : 217

கணபதி துணை

யாழ்ப்பாணம், காரைநகர்

# வாரிவளவென வழங்கும் கும்பரைப்புலத்தில் எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயகர்

# திருவூஞ்சல்

## காப்பு

சீர்மேவு மதி நதியோடரவு சூடுஞ்
சிவபெருமா னுமையருஞ் செல்வனாகிப்
பார்மேவு காரைநக ரதனி னீடும்
பதிவாரி வளவெனவே பகருமற்றோர்
பேர்மேவு கும்பரைப் புலத்தில் வாழும்
பெம்மானெங் கற்பக விநாயகன் மேல்
நார்மேவு மூஞ்சலிசை யொன்றுபாட
நாடுமவன் திருவடிகள் காப்பதாமே. 1

## நூல்

துங்கமுறு நால்வேதங் கால்களாகத்
தூய சிவா கமம வையுந் தரமதாக
அங்கமவை யோராறுங் கயிறதாக
ஆருமுப நிட தங்கள் பலகையாகப்
பொங்கு மணியட்சரங்க ளிளைகளாகப்
பொருந்து பிரணவமே யோருருவமாகக்
கங்கமிளிர் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல். 2

அம்புயனு மரியுமிகு மகிழ்விற் கூட
அமரர்புரி பல்லாண்டினகில நீடக்
கிம்புருடர் கின்னரர்கள் கீதம் பாடக்
கிளிமொழியா ரரமகளிர் நடனமாடத்
தும்புருநா ரதரிசையின் யாழை நாடச்
சூழவரு கணநாதர் தாளம் போடக்
கம்புலவுங் கும்பரைப்பு லத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல். 3

ஏரணவுங் கண்ணுடி கவரி காட்ட
இலகு குடை கொடியால வட்ட நீட்டத்
தோரணங்கண் மாலை நிரை துவசம் பூட்டச்
சோபிதமாய்த் தீப நிரையிருளை யோட்டப்
பாரணமா நிவேதனங்கள் பலவு மூட்டப்
பரவுமெழின் மாதருயர் வடந் தொட்டாட்டக்
காரணிசெய் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பக விநாயகரே யாடீருஞ்சல். 4

எண்ணிய வான் பொரு நூறுடைம்பி நின்முன்
இரவிசிதம் பரவுடையா ரிசைந்த பூசை
பண்ணியவா றவர் தோன்றல் காசிநாதர்
பரித்தபடி சேய்சுப்ப வுடையார் போற்றிப்
புண்ணியமார் புத்திரப் பேறடை வேண்டிப்
புரியுமடா லயமதனிற் பொலிந்த மூர்த்தி
கண்ணியமார் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பகவி நாயகரே யாடீருஞ்சல். 5

நற்கனக சூரியர்தம் மரபு பேணி
ஞால மிளிர் சுப்பவுடையாரின் செம்மல்
சற்குணனி ராமநாதன் தலைமை போற்றச்
சாருமசு பதிநாளி னங்கு ரித்த
பொற்கலைதேர் மகன்புநருத் தாரணஞ்செய்
பொருவிறிருப் பணிக் கோயிலுறை யுந்தேவ
கற்கசரில் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பகவி நாயகரே யாடீருஞ்சல். 6

அணியிலகு கோயிற்ப திட்டை யாதி
அரியதிருத் தொண்டினிடை மனமதாரக்
குணியிலகு நிதிகோலி வருடந்தோறும்
குலவு பணிபற்பலவுஞ் செய்வோர் மேலும்
மணியிலகு சுதர்முதல பாக்கியங்கள்
மருவிய நல் வாழ்வருளுங் கடவுணீடுங்
கணியிலகு கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பகவி நாயகரே யாடீருஞ்சல். 7

மூவடியார் திருமேனி பொலிவு பூப்ப
முடிமுதலா மணிப்பணிகளிருள்கால் சீப்பச்
சேவடிகள் சேவிப்போர் கரங்கள் கூப்பச்
சேரருளிற் சித்திபுத்தி மகிழ்ந்து காப்பக்

கோவடையுந் தேவர்மலர் மாரிதூர்ப்பக்
கும்பமுனி தனக்கருளும் விமலநாத
காவடையுங்கும் பரைப்புலத்தில் வாழும்
கற்பகவி நாயகரே யாடீருஞ்சல். 8

உலகவுரு வானரத மதனிலூர்ந்து
உம்பருடனிம் பரமேயினிது போற்றும்
அலகிறிருவமை விழாச் சிறப்புப் பூசை
ஆயமுறை நியமமாக வாண்டு தோறும்
இலகவினி தாற்றுமெச மானன்றுனும்
இருநிதிய மீய்குநரு மென்றும் வாழக்
கலைகள்மிகு கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பகவி நாயகரே யாடீருஞ்சல். 9

வேதமுதற் பொருளான தேவே போற்றி
வேண்டுவா மெவையுமரு டருவோய் போற்றி
பாதிமதி சூடியருள் பகவ போற்றி
பன்னிருகை வேலவனார் முன்னோய் போற்றி
மாதுவல வைக்கினிய மணாளபோற்றி
வஞ்சனையார் கயமுகனை வதைத்தாய் போற்றி
காதரமில் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீருஞ்சல். 10

சிவைதருசீரைங் கரரே யாடீருஞ்சல்
தேருதார் பயங்கரரே யாடீருஞ்சல்
சுவைதரு சீர்ப் பரம்பொருளீ ராடீருஞ்சல்
தூயர்வர்தம் மனப்பொருளீ ராடீருஞ்சல்
குவைதருமோங் காரமுளீ ராடீருஞ்சல்
கதைதருபூங் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீருஞ்சல். 11

## வாழி

மன்னுமறை யந்தணர் பின்னோர்கள் வாழி
படியினுயர் மழைவழங் சுரந்து வாழி
தன்னிகரில் சைவநெறி சிறந்து வாழி
தருவளரு மமரரொடு சுரபி வாழி
கன்னியர்கள் கற்பு நெறிநின்று வாழி
காரைநகர் கும்பரைப் புலத்தில் வாழுங்
சொன்னநிறை கற்பக விநாயகன்றன்
சுகிர்த திருவருணீடு வாழி வாழி. 12

## எச்சரிக்கை

மூவாமுழு முதலேகஜ முகனே யெச்ச ரிக்கை
மூவர் முதற் றேவர்பணி மூர்த்தி யெச்சரிக்கை
தூர்வாசமி மந்தாரைகொள் சோதீ யெச்சரிக்கை
தொலையாப்பவத் தழுந்தாதருள் தோன்றூ லெச்சரிக்கை
தூவேலவன் முன்னேவரு துணைவா வெச்சரிக்கை
தொன்மைக்கர மைந்தோடொளிர் தூயாவெச்ச ரிக்கை
பூவார் பொழிற் காரைநகர் பொலிவா யெச்ச ரிக்கை
புகழார் கும்பரைப் புலத்தடியாரருட் புனிதா வெச்சரிக்கை.

## பராக்கு

ஓமெனுயர் பிரணவசொ ரூபா பராக்கு
உம்பர்பணி யம்பொனடி யுடையாய் பராக்கு
தோமில்சிவ சக்திதரு சுதனே பராக்கு
துன்னுகண நாதர் புகழ் ஸ்வாமி பராக்கு
வாமமுறு வலவைபுணர் மகிணு பராக்கு
வஞ்சமிலர் நெஞ்சநிறை வரதா பராக்கு
சேம மிகு காரைகும்பரைப் புலத்தடியாய் பராக்கு
செகமுணர வரியபர தேவா பராக்கு. 14

## மங்களம்

திருவந்த சதுர்மறைப் பிரகாச பிரணவந்
திகழ்ரூப திருமங்களம்
சிவகுமர மலரகித சின்மயப ராநந்த
செகதீச திருமங்களம்
அருமந்த ராமனுறு மதிவீர கத்திதெறு
மபிதான திருமங்களம்
அடர்சூர னுரனூறு முருகேசன் முன்னவா
அமரேச திருமங்களம்
மருவந்த குழன்மாது வல்லபையின் பெருநேச
மணவாள திருமங்களம்
மகிமீதெ னிதமூறு விசுவாச கணநாத
வரதீர திருமங்களம்
உருவந்த லட்டுகமொ டங்குசம் பாசகர
மொளிர் தேச திருமங்களம்
உயிர்காரை நகர்மேவு கும்பரைப்புலப் பதிவாச
வுமைபால திருமங்களம். 15

முற்றுப் பெற்றது

அன்பளிப்பு :

# வெங்கடேஸ்வரா

இல. 97, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்

கிளை :

# சரவணா ஸ்டோர்ஸ்

இல. 18, பிரதான வீதி

அப்புத்தளை

தொலைபேசி : **263**

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய
கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ
விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்

# K. பரமநாதன்

சரஸ்வதி அரிசி ஆலை

நொச்சியாகம

அன்பளிப்பு :

செல்வம்ஸ்

நெடுங்கேணி

தொலைபேசி : 8

அன்பளிப்பு :

சிவஞானம்

ஸ்டோர்ஸ்

ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்

தொலைபேசி : 7237

அன்பளிப்பு :

சோமாஸ்

வேம்படி

காரைநகர்

அன்பளிப்பு :

சரஸ்வதி

லிமிட்டெட்

கொரணை

வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்
சிறப்புற நிகழ திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

# சிற்றி அரிசி ஆலை

கண்டி வீதி : வவுனியா

தொலைபேசி : 301

அன்பளிப்பு :

# R. .T ஆறுமுகம் புத்திரர்கள்

புத்தளம் றோட்

நொச்சியாகம

# ஆலய நிருவாகஸ்தர் கூறும்

## நன்றி நலம்

தனதடி வழிபடுமவர்க்கு வரமழை சொரியும் கற்பக விநாயகப் பெருமானின் கருணைபோல் உயர்ந்து விளங்குகிறது இராஜகோபுரம். தூல லிங்கமாகத் தூரத்தே வருவாரின் கட்புலனுக்கும் அகப்பட்டு எம்பெருமானின் திருவடியைச் சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தை உருவாக்கும் இக் கோபுரத் திருப்பணி ஆறு மாத காலத்தில் நிறைவேற உதவியவர் பலர். அவரெல்லாம் எம்மாற் போற்றப்பட வேண்டியவராவர்.

தளர் நடைப் பருவத்தில் தாங்கி நடை பயிற்றும் தாய் போல் வந்து கோபுர நிர்மாணத்திற்கு வழிவகுத்து உரிய சிற்பாசாரியர்களை தென் இந்தியாவில் இருந்து வரவழைத்து கண்காணித்தவர் சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி; பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆவர்.


எமது எண்ணமெல்லாம் பிரதிபலிக்கும்படியாக எழில்மிகு தோற்றத்துடன் இவ்விராஜ கோபுரத்தை நிர்மாணம் செய்தவர்கள் சிதம்பரத்தைச் சேர்ந்த சிற்பி K. இராமமூர்த்தியும் அவரின் குழுவினரும், சிவாசாரியர்களும், ஆலய அர்ச்சகரும் சிவாகம முறைப்படி பயபக்தியோடு கும்பாபிஷேகக் கிரியைகளைச் செவ்வனே செய்துள்ளார்கள். பேரன்பர்கள் திருந்திய பொருளிதெல்லாம் திருப்பணிக்களியும் என்று பேரன்போடு பெருந் தொகைப் பணம் உதவினுர்கள். சிறுவர்கள் தொடக்கம் முதியவர் வரை பலர் சிரமதான முயற்சிகளிற் பங்கு கொண்டு பணியாற்றினர். செய்யுந் தொழிலே தெய்வமெனக் கொண்ட தொழிலாளர்கள் கண்ணியத்தோடு கடமையாற்றினர். யாழ். விவேகானந்தா அச்சகத்தினர் இம்மலரைக் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டு உதவினர்.

இவ்வண்ணம் உதவிய அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்து; கற்பக விநாயகப் பெருமானின் திருவருட் பிரசாதம் சகலருக்கும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

-ஆலய நிருவாகஸ்தர்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

காரைநகர், வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய
மகா கும்பாபிஷேகம் நிறைவெய்த
விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றோம்,



# தேவராசா ஜுவல்லர்ஸ்

23, பிரதான வீதி,
கொச்சிக்கடை.

தொலைபேசி : 234



**காரைநகர், வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக நிகழப் பிரார்த்திக்கின்றோம்.**

# இ. ச. பேரம்பலம் அன் சன்ஸ்

இல. 50, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்

தொலைபேசி : **324**

அன்பளிப்பு :

# நாகராசா கோப்பறேசன்

இல. 320, பிரதான வீதி

பசறை

தொலைபேசி : 320

# நெல்மா அரிசி ஆலை

கோவில்க் குளம்

வவுனியா

அன்பளிப்பு



# வே. நீதிராசா

இல, 220, காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்

அன்பளிப்பு :

விஜயகர்

டெக்ஸ்டைல்

79, சிலாபம் றேட்,

கொச்சிக்கடை.

அன்பளிப்பு :

மு. கார்த்திகேசு

வாரிவளவு

காரைநகர்

அன்பளிப்பு

விநாயகர்

ஸ்ரோர்ஸ்

வாரிவளவு,

காரைநகர்.

அன்பளிப்பு

நியு விஜயா

ஸ்டோர்ஸ்

146, ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

# கணேசன்ஸ்

நவீன சந்தை : சுன்னாகம்.

தொலைபேசி : 224.

அன்பளிப்பு

## அம்பாள் ஸ்டோர்

72, பிரதான வீதி,

கொச்சிக்கடை.

அன்பளிப்பு

## K. சண்முகம்பிள்ளை

163, பிரதான வீதி,

நாத்தாண்டியா.

அன்பளிப்பு

கணேசன் பேக்கரி
கொச்சிக்கடை.

★

கிளை :

கணேசன் ஸ்ரோர்ஸ்
கொச்சிக்கடை.



அன்பளிப்பு :

வெலிகம ஸ்ரோர்ஸ்

139, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11.

T' Phone : 23271

மகா கும்பாபிஷேக நன்னாளில் எல்லோரும்
விநாயகப் பெருமானின் அருள்பெற வேண்டுகிறோம்.

# சித்திவிநாயகர் ஸ்டோர்ஸ்

K. சதாசிவம்

165, பிரதான வீதி,

நாத்தாண்டியா.

அன்பளிப்பு :

ராஜா ஸ்டோர்ஸ்

99, 101, மெயின் வீதி,

கொச்சிக்கடை.

தொலைபேசி : 248

அன்பளிப்பு :

★

மகாதேவன்

ஸ்ரோர்ஸ

N. A. முருகேசு

10, பிரதான வீதி,

தங்கொட்டுவ.

காரைநகர், வாரிவளவு கற்பக விநாயகரின் ஆலய
மகா கும்பாபிஷேகம் இனிது நிறைவுபெற
விநாயகரைப் பிரார்த்திக்கின்றேம்.

ரஞ்சினி ரெக்ஸ்ரைல்ஸ்

83, பிரதான வீதி,
கொச்சிக்கடை.

10 NOV 2018
2124
19 NOV 2018
2124
18 DEC 2019
2124

வாரிவளவு கற்பக விநாயகர் மகா கும்பாபிஷேகம்
சிறப்புற நிகழ விநாயகப் பெருமான்
அருள்பாலிப்பாராக.



# விநாயகர் ஸ்ரோர்ஸ்

123, பிரதான வீதி,

அழுத்கம.

தொலைபேசி : 048 - 5191



வாரிவளவு கற்பக விநாயகர்

இராசகோபுர மகா கும்பாபிஷேகம்

இனிது சிறப்புற நிகழ

விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.



# நந்தினி ஸ்டோர்ஸ்

கொச்சிக்கடை.


விவேகானந்தா பிறின்ரேஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம். 645-82.